இது
# நம்தேசம்
15.07.2026 - 31.07.2026



## மறந்து போகுமோ...?
# கறுப்பு யூலை

தமிழர்களின் பிரச்சனைக்காக கூட்டமைக்கிறோம் என்பதில் சூழ்ச்சி உண்டு : அருட்தந்தை சக்திவேல்!

உபதவிசாளர் தெரிவில் இயற்கை நீதி நிலைநாட்டப்பட்டிருக்கிறது : கஜேந்திரகுமார் எம்.பி!

இலங்கையில் நடந்தது இனப்படுகொலை : சர்வதேச நீதி வேண்டும் : ஐரோப்பிய தூதுக்குழுவிடம் வலியுறுத்தல்!

# தமிழர்களின் பிரச்சனைக்காக கூட்டமைக்கிறோம் என்பதில் ஏதோ சூழ்ச்சியிருக்கிறது

## – அருட்தந்தை சக்திவேல் சந்தேகம் –



தமிழர்களின் பிரச்சினைக்காக கூட்டமைக்கின்றோம் என்று கூட்டு சேர்ந்ததில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருப்பதாகவே தோன்றுகின்றது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் கடந்த 17.07.2026 அன்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அண்மையில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் சார்ந்த ஆறு கட்சிகளின் கூட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு கூட்டாக குரல் கொடுத்து செயற்படுவதே என கூட்டுக் கட்சிகளின் தலைவர்கள் கருத்து தெரிவித்தனர்.

எத்தகைய அரசியல் கொள்கை விளக்கம் இங்கே? அவசர அவசரமாக கூட்டு உருவாக்கப்பட்டது ஏன்? இதன் பின்னணியில் உள்ள அரசியல் சக்தி எது? இக்கூற்று அரசியல் மேடை யாரை திருப்திப்படுத்துவதற்காக? கட்சிகள் தங்களுக்கு புதிய புதிய மேடைகளை தெரிந்துகொள்ளலாம்.

ஆனால், அது தமிழர்களின் அரசியலுக்கு எதிரானது எனில் அதற்கு எதிரான மக்களின் தீர்ப்பு நிச்சயம் உண்டு என்பதையும் கூற விரும்புகின்றோம்.

தமிழர்கள் முகங்கொடுக்கும் அனைத்து பிரச்சினைகளுக்கும் நீங்கள் எந்தெந்த பேரினவாத கட்சிகளோடு சேர்ந்து ஆட்சி அமைத்தீர்களோ, அமைச்சுப் பொறுப்பை ஏற்று சலுகைகளை முழுமையாக அனுபவித்தீர்களோ, அவர்களே காரணம் என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். சலுகைகளுக்காக சாமரை வீசிய உங்கள் மனசாட்சிக்கும் தெரியும். இந்நிலையில் தமிழ் மக்களுக்காக புதிய கூட்டு என்பது கேலிக்கூத்து என்பதே மக்கள் அபிப்பிராயம்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தின் அரசியல் பிரச்சினையிலும் அன்றாட பிரச்சினைகளிலும் தினமும் களத்தில் நின்று மக்களோடு மக்களாக போராடும் கட்சி ஒன்றை தவிர்த்துவிட்டு, அதுவும் உங்களோடு நாடாளுமன்ற எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் கட்சியை புறந்தள்ளி "நாங்கள் தமிழர்களின் பிரச்சினைகளுக்காக கூட்டாக குரல் கொடுக்கப் போகின்றோம்" என்பதன் அரசியல் சூழ்ச்சியை மக்கள் அறிவர்.

தமிழர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அடிப்படை காரணம் ஒற்றை ஆட்சி அரசியல் யாப்பும் சிங்கள பௌத்த பேரினவாதமும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நீங்கள் முண்டு கொடுத்துக்கொண்டிருக்கும் பிரதான கட்சியே அதற்கு காரணமாக இருக்கும்போது அதனை விமர்சிக்கவோ அதனின்று வெளியேறவும் துணிவற்றிருக்கும் நீங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு கூட்டாக செயற்படப் போகின்றோம் என்பதை நம்புவதற்கு தமிழ் மக்கள் ஏமாளிகள் அல்ல என்பதையும் கூற விரும்புகின்றோம்.

அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு யோசனைகளை முன்வைப்பதற்காக தமிழ் சட்டத்தரணிகளும் சிவில் சமூக அமைப்புகளும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தலைமையிலான கட்சியும் கூட்டாக சேர்ந்து கலந்துரையாடல்களை நடத்திக்கொண்டிருக்கையில் அவர்களோடு இணையவேண்டிய நீங்கள் புதிதாக தமிழர்களுக்காக கூட்டு அமைக்கின்றோம் என்பது மறைமுகமாக ஒற்றை ஆட்சி இருளுக்குள் தமிழர்களின் அரசியலை தள்ளுவதற்கான நரித்தன தந்திர அரசியலாகவே சிந்திக்கவேண்டியுள்ளது.

கறுப்பு ஜுலையை நினைவுகூரும் மாதத்தில் உங்கள் கூட்டை ஆரம்பித்துள்ளீர்கள். நாட்டில் தமிழர்களின் அவல நிலையை 1983 இன அழிப்பு சிங்கள பௌத்தத்தின் கோர முகத்தினை உலகிற்கு காட்டியது.

இனப்படுகொலை யுத்தம் நடந்தபோது நீங்கள் யாரோடு நின்றீர்கள் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். தற்போது செம்மணி சமூக புதைகுழி அரசியல் நீதியின் சாட்சியாக தோன்றுகையில் அது தொடர்பான நீதிச் செயற்பாட்டில் உங்கள் முகங்களை காண முடியவில்லை.

நீதிக்கான குரலையும் கேட்க முடியாதுள்ளது. படையினரும் தொல்லியல் திணைக்களமும் கடந்த காலங்களில் மட்டுமல்ல, நிகழ்காலத்திலும் மக்களின் காணிகளை கைப்பற்றுவதற்காக எடுக்கின்ற முயற்சிகளின்போது எங்கு இருக்கிறீர்கள் என்று தெரியாமல் இருக்கின்றபோது தமிழர்களின் பிரச்சினைக்காக கூட்டமைக்கின்றோம் என்பதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருப்பதாகவே தோன்றுகின்றது.

வடக்கு – கிழக்கு தமிழர்களின் தாயகம் சார்ந்த அரசியல் பிரச்சினை என்பதும், மலையக தமிழர்களின் இருப்பு மற்றும் அரசியலும், முஸ்லிம்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் என்பதும் தனித்துவமானவை.

அதற்கான அரசியல் கொள்கை விளக்கம் நடைமுறை சார்ந்த செயற்பாடுகளை புதிய கூட்டு, மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அது தொடர்பான இணக்கப்பாட்டிலேயே கூட்டு உருவாகுதல் வேண்டும். அதுவும் வாக்களித்த மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் நிகழ்தலே சாலச் சிறந்தது. ஆனால், மக்களுக்கு தூ ரமாக நட்சத்திர ஹோட்டலில் நிகழ்வது மக்களுக்கான கூட்டாக இருக்க முடியாது என்பதே எமது கருத்து நிலைப்பாடு என அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# சாவகச்சேரி நகர சபை உபதவிசாளர் தெரிவு இயற்கை நீதி நிலைநாட்டப்பட்டிருக்கிறது!

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் கருத்து!

சாவகச்சேரி நகர சபையின் புதிய தவிசாளர் தெரிவில் இயற்கை நீதி நிலைநாட்டப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் தவிசாளர், வட மாகாண ஆளுநரால் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து, புதிய உப தவிசாளர் தெரிவு 29.07.2026 அன்று நடைபெற்றது.

அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து தெரிவித்தபோது,

சாவகச்சேரி நகரசபையில் புதிய உப தவிசாளருக்கான தெரிவு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அந்தத் தெரிவு தமிழ் தேசியப் பேரவையைப் பொறுத்தவரையிலே உண்மையிலே நடைபெற்றிருக்கக் கூடாது.

எங்களின் நிலைப்பாடு, முன்னாள் உப தவிசாளர் கிஷோர் ஜனநாயக விரோதமாக ஆளுநரால் பதவி நீக்கப்பட்டார். அதனால் உப தவிசாளர் தெரிவுக்கான கூட்டத்தை தமிழ் தேசிய கட்சிகள் புறக்கணித்தல், கோரமின்றி கூட்டம் ஒத்தி வைக்கப்படவேண்டும் என்றே இருந்தது.

முன்னாள் உப தவிசாளர் தனது பதவி பறிப்பு ஜனநாயக விரோதமான செயல் என நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள நிலையில் வழக்கின் தீர்ப்பு வரும் வரையிலாவது, புதிய உப தவிசாளர் தெரிவை நடத்தவிடாமல் தடுத்திருக்க வேண்டும்.

ஆனால் தமிழ் அரசு கட்சியினர் புதிய உப தவிசாளர் தெரிவுக் கூட்டத்துக்கு சென்றால், தெரிவு இடம்பெறும் நிலைமை காணப்பட்டதால், நாமும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் கூட்டத்தில் கலந்துகொண்டு, தமிழ் அரசு கட்சியினர் முன்னிறுத்தியவருக்கு எதிராக நாமும் ஒருவரை முன்நிறுத்தினோம். இருவரும் சம வாக்குகளை பெற்றுக்கொண்ட நிலையில், திருவுளச் சீட்டு மூலம் எம்மால் நிறுத்தப்பட்ட கோகுல்ராஜ் புதிய உப தவிசாளராக தெரிவானார்.

நான் ஏன் இதைச் சொல்கின்றேன் என்றால், ஒருபக்கம் 'ஒற்றுமை' என்று கூறுகிறார்கள். ஆகக் குறைந்தது தங்களின் "பங்காளிகள்" என்று சொல்லிக்கொண்டு இன்றைக்கு பறைசாற்றிக் கொண்டிருக்கக்கூடிய தரப்புகள், அந்தப் பங்காளிகளுக்குத் துரோகம் இழைக்கும் வகையில், முதுகிலே குத்துகின்ற வகையில் செயற்பட்டிருக்கக்கூடாது.

தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரின், அவரது எடுபிடிகளின் சித்தாந்தத்தின் காரணமாக, நீதி நியாயமில்லாமல், அதிகாரத்தை எப்படியென்றாலும் பறித்து, எதையாவது செய்து அதிகாரத்தை, பதவிகளைப் பறிக்கின்ற ஒரு கலாசாரத்தைக் கடைப்பிடிக்கின்ற ஒரு கும்பலாகத்தான் இருக்கிறார்கள்.

இன்றைக்கு தமிழ் அரசுக் கட்சி திட்டமிட்டு மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தலைமைத்துவத்தாலே திட்டமிட்டு மாற்றப்பட்டிருக்கிறது.

அந்த வகையில், நேற்றைய தினம் நடைபெற்ற உப தவிசாளர் தெரிவின்போது, ஒரு இயற்கையின் நீதி நிலைநாட்டப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உபதவிசாளருக்கும், அந்தக் கட்சிக்கும் நாங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்றார்.



# எக்னெலிகொட காணாமலாக்கப்பட்ட விவகாரம் மேல் நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு!

கடத்தி காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட விவகாரத்தில் வழக்கின் நான்காவது சாட்சியாளரான சுமதிப்பால சுரேஷ்குமார் எனும் தவேந்திரன் அல்லது முரளியிடம் மீண்டும் சாட்சியங்களைப் பெறுவதற்கு கொழும்பு மூவர் அடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் 24.07.2026 அன்று அனுமதி அளித்தது.

கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட பிரகீத் எக்னலிகொட விவகாரம் தொடர்பிலான வழக்கு வெள்ளிக்கிழமை (24) மேல் நீதிமன்ற நீதிபதி நயனா செனவிரத்ன தலைமையிலான நலின் ஹேவாவசம், லக்மாலி ஹேவாவசம் ஆகியோரை உள்ளடக்கிய மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது ஏற்கனவே வழக்குத் தொடுநர் சட்டமா அதிபர் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளைப் பரிசீலனை செய்த நீதிபதிகள் குழாம், நான்காவது சாட்சியாளரான முரளியிடம் மீண்டும் சாட்சியத்தைப் பதிவு செய்யத் தீர்மானித்தது. அதற்குரிய திகதியை நீதிமன்ற விடுமுறையின் பின்னர் வழங்குவதாக நீதிமன்றம் அறிவித்தது.

முன்னதாக முரளி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கும் ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்துக்கும் ஒப்புதல் வாக்குமூலங்களை வழங்கி இருந்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் இருந்த விடயங்களுக்கு மாறாக கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முரளி மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தார்.

தொடர்ந்து முரளியை முறைப்பாட்டாளர் தரப்புக்குப் பாதகமான சாட்சியாளராகக் கருதி நடவடிக்கை எடுப்பதாகச் சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தது. எனினும் ஆட்சி மாற்றத்தின் பின்னர் சிரேஷ்ட சட்டத்தரணி கே. எஸ். ரத்தினவேல் ஊடாக மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றினைத் தாக்கல் செய்த முரளி, 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தான் கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் வழங்கிய சாட்சியமானது பலவந்தத்தின் அடிப்படையில் வழங்கியது எனவும், சரியான சாட்சியத்தை வழங்க தனக்கு மீண்டும் அவகாசம் தருமாறும் கூறியிருந்தார்.



இந்த விண்ணப்பத்தை மையப்படுத்தி சட்டமா அதிபர் சார்பிலும் கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விண்ணப்பம் செய்யப்பட்டது. எனினும் பிரதிவாதிகளான இராணுவ புலனாய்வுத்துறையைச் சேர்ந்த ஒன்பது பேர் சார்பாகவும் இதற்கு கடும் ஆட்சேபனை முன்வைக்கப்பட்டது.

எவ்வாறாயினும் இது தொடர்பிலான உத்தரவை நேற்று அறிவித்த கொழும்பு மூவர் அடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள், நான்காவது சாட்சியாளரான சுமதிபால சுரேஷ்குமார் அல்லது முரளியிடம் மீண்டும் சாட்சியத்தைப் பதிவு செய்வதற்கு நீதிமன்றம் தீர்மானிப்பதாக அறிவித்தனர். அதன்படி இந்த வழக்கின் மேலதிக சாட்சி விசாரணைகள் எதிர்வரும் ஒகஸ்ட் 7 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

# பறிபோகும் கன்னியா வெந்நீரூற்று! அடிக்கல் நாட்டிய தொல்லியல் திணைக்களம்!

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலய காணியில் தமிழ் மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் தொல்லியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சைத்தி கட்டுவதற்கான அடிக்கல் 22.07.2026 அன்று நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

வில்கம் விகாரை விகாராதிபதி அம்பிட்டிய சீலவன்சதிஸ்ஸ தேரரின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு அருகாமையில் தொல்லியலுக்குரிய இடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமான உறுதிக் காணியில் குறித்த கட்டுமானத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுளது. இதற்கான அடிக்கல்லை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.எம்.ஹேமந்த குமார, திருகோணமலை மாவட்ட தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.யூ.சுரங்க பெரேரா உள்ளிட்ட பலர் நாட்டி வைத்தனர்.

குறித்த தொல்லியலுக்குரிய பகுதி என கூறப்படும் பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமான பகுதியில் விகாரை ஒன்று கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு அதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்ற நிலையில் அதனை எதிர்த்து 16.07.2019 அன்று பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருகோணமலை மடத்தடி மாரியம்மன் ஆலய தர்மகர்த்தாவும், கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் ஆலய தர்ம கர்த்தாவும் நம்பிக்கைப் பொறுப்பாளருமான திருமதி கோகிலரமணி என்பவர் பௌத்த மத ஆக்கிரமிப்புக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் ஆலோசனைக்கு அமைய திருகோணமலை மேல் நீதிமன்றில் 22.07.2019 அன்று வழக்கு ஒன்றை தாக்கல் செய்து ஐந்து தடை ஆணைகளை விதிக்கும்படி கோரியிருந்தார். குறித்த பகுதி தொல்லியலுக்கு உரியது என்ற காரணத்தால் பிள்ளையார் ஆலயம் கட்டுவதற்கான பிறிதொரு இடத்தில் 10 பேர்ச் காணி வழங்கப்பட்டிருந்தது.

இதன்பின்னர் அப்பகுதியில் தொல்லியத் திணைக்களத்தினால் தொடர்ச்சியாக அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்நிலையில் குறித்த பகுதியில் விகாரை கட்டுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாக சமூக ஊடகங்களில் வெளியான நிலையில் நேற்று (21) செவ்வாய்க்கிழமை உப்புவெளி பிரதேச சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அவ்விடத்திற்கு விஜயம் மேற்கொண்டு ஆயத்த வேலைகளை பார்வையிட்டனர்.

இதன்போது கட்டுமானங்களுக்குத் தேவையான செங்கற்கள் உள்ளிட்ட பொருட்கள் இறக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தனர். அத்துடன் இது தொடர்பாக திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் ச.குகதாசனும் அரச தரப்புகளுடன் பேசியதாகவும் அதற்று மறுப்பு தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் பௌத்த கட்டுமானம் இடம்பெறவுள்ளதாக கூறப்படும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என அரச தரப்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டு அப்பகுதியில் எவ்வித புதிய கட்டுமானங்களும் இடம்பெறாது எனவும் சிதைவடைந்து இருக்கின்ற தொல்லியல் சின்னங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இடம்பெறுவதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்ட நிலையில் குறித்த இடத்தில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதேவேளை திருகோணமலை மேல் நீதிமன்றால் வழங்கப்பட்ட தீர்ப்பை உறுதி செய்யும் முகமாக மடத்தடி மாரியம்மன் ஆலய தர்மகர்த்தாவும், கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் ஆலய தர்ம கர்த்தாவும் நம்பிக்கைப் பொறுப்பாளருமான திருமதி கோகிலரமணி என்பவரினால் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் அவர்களின் ஊடாக வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கையும் 22.07.2026 அன்று மேற்கொள்ளப்பட்டது.





# கன்னியா வெந்நீரூற்றின் வரலாற்றை மாற்றியமைப்பது அதிர்ச்சி தருகிறது!

## தொல்லியல் திணைக்களம் மீது ஆறுதிருமுருகன் விசனம்!

கன்னியா வெந்நீரூற்றின் வரலாற்றை மாற்றியமைப்பது கண்டு நாம் மிகுந்த வேதனை அடைகிறோம் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கன்னியா வெந்நீரூற்று தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கன்னியா வெந்நீரூற்று தொடர்பான செய்தி சைவத் தமிழ் மக்களுக்குப் பேரதிர்ச்சியை தருவதாகும்.

கன்னியா வெந்நீரூற்றில் இருந்த விநாயகர் ஆலயம், சிவனாலயம், சிவனடியார் மடம் ஆகியன அழிக்கப்பட்டு, தொல்லியல் திணைக்களம் தற்போது கன்னியா வெந்நீரூற்றின் வரலாற்றை மாற்றியமைப்பது கண்டு நாம் மிகுந்த வேதனை அடைகிறோம்.

ஏற்கனவே இந்நாட்டின் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் பலரிடம் இவ்விடயம் தொடர்பாக முறையிட்டுள்ளோம். தயவுசெய்து சைவத் தமிழர்களின் வரலாற்றை மாற்றி அமைக்காதீர்கள்.

கன்னியா வெந்நீரூற்றை பொறுத்தவரை சைவத் தமிழர்களின் தொன்மை வரலாற்றின் சின்னம் எனலாம். இத்தகைய வரலாற்றை யாரும் மறைக்க முடியாது.

சைவ மக்களின் மிகப்பெரிய அடையாளச் சின்னமாக விளங்கும் கன்னியா வெந்நீரூற்றை போர்ச்சூழலைப் பயன்படுத்தி பௌத்தமயமாக்க முனைவதும் வேதனை தரும் செய்தியாகும்.

தொல்லியல் திணைக்களம் சைவ அடையாளங்களை மாற்றி வேற்று மதத்தவரின் அடையாளங்களை நிலைநிறுத்த முனைவதும் மகா துரோகமான விடயம்.

இலங்கையின் ஜனாதிபதி இவ்விடயத்தில் உடன் அக்கறை செலுத்தி நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று சைவ மக்கள் சார்பில் நாம் அன்போடு வேண்டுகின்றோம்.

கன்னியா வெந்நீரூற்றுச் சூழலை சைவ சூழலிலிருந்து சைவ மக்களின் அடையாளங்களை தொடர்ந்து முற்றாக அழிப்பதும் அங்கே இருந்த வரலாற்று தடயங்களை மாற்றி அமைப்பதும் மிகுந்த வேதனை தருகிறது.

கன்னியா வெந்நீரூற்றில் வழிபாடு செய்த விநாயகர் ஆலயத்தை முற்றாக அழித்துவிட்டு அந்த விநாயகர் ஆலயம் இருந்தது, பௌத்த அடையாளம் உடைய இடம் என்று நீண்ட நாட்களாக ஆலயத்தை கட்ட அனுமதிக்காது காலம் கடத்துவது மிகுந்த வேதனைக்குரியது.

தற்போது கன்னியா வெந்நீரூற்று சூழலையே மாற்றி அமைக்கும் முயற்சி இலங்கை வாழ் சைவ மக்களுக்கு பேரதிர்ச்சியை தந்துள்ளது.

எனவே இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியும் தொல்லியல் திணைக்களத்தை சார்ந்தவர்களும் சகல அரசியல் தலைவர்களும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சைவ மக்களின் சார்பில் நமது வேண்டுதல் விடுக்கின்றோம் என்றுள்ளது.

# கறுப்பு யூலை உள்ளிட்டவைக்கு நீதியைப் பெற்றுத்தர முடியுமா?

## பாராளுமன்றத்தில் ஶ்ரீதரன் எம்.பி கேள்வி!

1983 கறுப்பு ஜுலை இனப்படுகொலை என்பது சாதாரணமானதல்ல. இதுபோன்று தமிழ் மக்களுக்கு எதிரான பல இனப்படுகொலைகள் நடந்துள்ளன. எனவே இந்த இனப்படுகொலைகள் தொடர்பாக ஒரு விசாரணைக்குழுவை அமைத்து நீதி பெற்றுத்தர முடியுமா? என அரசாங்கத்திடம் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் 23.07.2026 அன்று நடைபெற்ற கறுப்பு ஜுலை கலவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

43 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் மிகவும் கொடூரமான மிகப்பெரிய இனப்படுகொலை திட்டமிட்ட வகையில் அரச ஆதரவுடன் இடம்பெற்றது. வெலிக்கடை சிறைச்சாலை, களுத்துறை சிறைச்சாலை, பிந்துனுவெவ போன்ற சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல தமிழ் கைதிகள் கொல்லப்பட்டார்கள். இதுதான் இலங்கையில் நடந்த முதலாவது இனப்படுகொலையல்ல. 1954ஆம் ஆண்டு அல்லைக் கந்தளாயில் 154 தமிழ் விவசாயிகள் பொலிஸார் முன்னிலையில் சிங்களக் காடையர்களினால் வெட்டிப் படுகொலைசெய்யப்பட்டனர் .1956ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் 26000 தமிழ் குடும்பங்கள் விரட்டப்பட்டார்கள் பலர் கொலைசெய்யப்பட்டார்கள். முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத் முதலி , காமினி திஸாநாயக்க, சிறில் மத்யூ போன்ற ஐக்கியதேசியக்கட்சியில் கோலோச்சியவர்கள் அப்போதைய ஜனாதிபதி ஜே .ஆர். ஜெயவர்த்தனவின் வழிநடத்தலுடன் மிகவும் கொடூரமான படுகொலைகளை இந்த நாட்டில் செய்தார்கள்.

1983 இனப்படுகொலை என்பது சாதாரணமானதல்ல. எனவே தற்போதைய அரசாங்கத்திடம் நான் ஒரு கோரிக்கை விடுகின்றேன் .இந்த இனப்படுகொலைகள் தொடர்பாக ஒரு விசாரணைக்குழுவை அமைத்து உங்களினால் இதற்கு ஒரு நீதி பெற்றுத்தர முடியுமா?உங்கள் அரசாங்கம் பொறுப்பெடுத்து 2 ஆண்டுகள் ஆகின்றன. முள்ளிவாய்க்காலில் நடந்த இனப்படுகொலைக்கு கூட சர்வதேச விசாரணைக்கு போகக்கூடாது .அதனை நாம் அனுமதிக்கமாட்டோம் என ஜெனீவாவில் அரசாங்கம் பிரேரணைகளை முன்வைத்துள்ளீர்கள்.

ஆகவே இந்த மண்ணில் நடந்த மிகப்பெரிய இனப்படுகொலை, வாகரைப் படுகொலை, முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு கூட நீதியை வழங்க நீங்கள் தயாராக இல்லை. செம்மணியில் இதுவரை 471 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை தமிழர்களுடையவை செம்மணி ஆசியாவின் இரண்டாவு பெரிய மனிதப் புதைகுழியாக இடம்பிடித்துள்ளது.

1983 ஆம் ஆண்டு 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்காக மலையகத்தில் 2000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொடூரமாக கொல்லப்பட்டார்கள். 1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் ஓயாத அலைகள் மூலம் விடுதலைப்புலிகள் முல்லைத்தீவு இராணுவ முகாமை கைப்பற்றியபோது 1000 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். ஆனால் ஒரு தமிழர் கூட கொழும்பிலோ மலையகத்திலோ கொல்லப்படவில்லை. காரணம் தமிழர்கள் பலமாக இருக்கும்போது நீங்கள் மிகவும் யோசனையுடன் இருந்தீர்கள். தமிழர்கள் பலவீனமாக இருந்தபோதுதான் பல் ஆயிரம் தமிழர்களை கொன்றொழித்தார்கள்.

கொழும்பில், மலையகத்திலிருந்து தமிழர்கள் விரட்டப்பட்டபோது கப்பலில் ஏற்றி வடக்கிற்கு அனுப்பட்டபோது இந்தியாவும் கப்பல்களை அனுப்பி தமிழர்கள் வடக்கிற்கு கொண்டுவந்தது ஏனெனில் அப்போதே வடக்கு மற்றும் கிழக்கு என்பது தமிழர்களின் தாயகம். என்பதை இந்தியா ஏற்றுக்கொண்டிருந்தது. சர்வதேச சமூகம் இன்றும் ஏற்றுக்றுகொள்கின்றது.

ஆளுங்கட்சி 1983 ஜுலை 23 கலவரம் தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேலை பிரேரணை கொண்டு வந்துள்ளது.. 1987 இந்திய -இலங்கை உடன்படிக்கையின்படி வடக்கு, கிழக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தது .அதனை வழக்குப்போட்டு பிரித்தவர்கள் ஜே .வி.பி.யினர்.அதேபோன்று 2004 இல் சுனாமி பொதுக்கட்டமைப்பை வழக்குப்போட்டு



நிறுத்தியவர்களும் ஜே .வி.பி.யினர், ஆகவே அரசாங்கத்திலும் குற்றங்கள் உள்ளன.

தமிழர்களை ஒரு தேசிய இனமாக கருதி உங்களினால் ஒரு அரசியல் தீர்வை முன்வைக்க முடியுமா? இல்லை இப்படி தமிழர்களை ஏமாற்றுவதற்கான இவ்வாறான தீர்மானங்களை கொண்டுவந்து மாற்று திசைக்கு கொண்டுபோகபோகின்றீர்களா? எனக்கேள்வி எழுப்பினார்.

# நீதித்துறையில் கை வைக்காமல் நிறைவேற்று அதிகாரத்தை ஒழியுங்கள் : சஜித் கோரிக்கை!

நீதித்துறையின் சுதந்திரத்துக்கு அழுத்தம் கொடுத்து ஜனநாயகத்தைச் சீர்குலைக்க அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளைத் தாம் முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டுமாயின் நீதித்துறையில் கை வைக்காமல் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை, நீதித்துறை ஆகிய மூன்றுமே ஒரு நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் பிரதான தூண்களாகும். இதில் நீதித்துறை தனித்துவமானதொரு பங்கை ஆற்றுகின்ற அதேவேளை, சுதந்திர ஊடகங்களும் சிவில் சமூகப் பிரஜைகளும் ஜனநாயகத்தின் ஏனைய இரு முக்கிய தூண்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில், தற்போதைய அரசாங்கம் நீதித்துறைக்குத் தொடர்ச்சியாக அழுத்தங்களை வழங்கி வருகிறது. உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதற்கும், நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பாமல் இழுத்தடிப்பதற்கும் அரசாங்கம் முனைகிறது.

இதன் மூலம் நீதிபதிகளின் சுதந்திரத்திற்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்க அரசாங்கம் மேற்கொள்ளும் இந்த அருவருக்கத்தக்க முயற்சியைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் அதனை நிராகரிக்கவும் செய்கிறோம்.

உயர் நீதிமன்றங்களின் நீதிபதி வெற்றிடங்களை நிரப்பாமல் வைத்திருப்பதே நீதித்துறைக்கு விடுக்கப்படும் மறைமுக அழுத்தமாகும். நாட்டில் நீதியை நிலைநாட்டும் செயல்முறை, சட்டத்தின் ஆட்சி மற்றும் நியாயத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்கும் கொள்கைகளுக்காக ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி மற்றும் முற்போக்கு எதிர்க்கட்சிகள் எப்போதும் தயாராகவே உள்ளன.

எனவே, ஜனநாயகத்திலும் நீதித்துறையிலும் கை வைக்காமல், ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை ஒழிக்கும் புதிய அரசியலமைப்பை நோக்கி அரசாங்கம் நகர வேண்டும்.

நீதித்துறைக்கு அழுத்தம் கொடுக்காமல், நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்காகவே மக்கள் இந்த அரசாங்கத்திற்கு ஆணையை வழங்கியுள்ளனர். இந்த மக்கள் ஆணையைத் தட்டிக்கழிப்பது மக்களின் மனித மற்றும் அடிப்படை உரிமைகளை மீறும் மிக மோசமான செயலாகும் என்றார்.

# தொடர்ந்து அத்துமீறும் தமிழக மீனவர்கள் தொழிலை இழக்கும் தாயக மீனவர்கள்!



தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களால் தீவக கடற்றொழிலாளர்களின் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளதாக, நெடுந்தீவு பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உப தலைவர் செபமாலை அந்தோணி சிவராசா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமிழக கடற்றொழிலாளர்களின் இழுவைமடிப் படகுகள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து, அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, மண்டைதீவு மற்றும் புங்குடுதீவு கடற்றொழிலாளர்களின் வலைகளை அறுத்து நாசமாக்கியுள்ளன.

இதனால் பல இலட்ச ரூபாய் பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டுள்ளமையால், எமது தொழிலாளர்கள் பல இலட்சம் ரூபாய் நஷ்டமடைந்துள்ளனர். அவர்கள் மீண்டும் அந்த வலைகளை வேண்டி தொழில் செய்வதற்கு பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளனர்.

வலைகளை இழந்த தொழிலாளிகளுக்கு நஷ்டஈடுகளை வழங்கக் கூட எவரும் இல்லை. யாரை குறை சொல்வது, யாரிடம் சென்று முறையிடுவது எனத் தெரியாத நிலையில், அநாதரவாக தொழிலாளிகள் நிற்கின்றனர்.

எங்கள் நாட்டு அரசாங்கத்திடம் கடற்றொழில் அமைச்சர் ஊடாக தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த வேண்டும் என கோரி வருகிறோம். கடற்படையினர் முழுமையான கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு, தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்த வேண்டும்.

அதேநேரம், தமிழக முதலமைச்சர் விஜயிடமும் தயவான வேண்டுகோளை முன்வைக்கிறோம். காரைக்கால், புதுக்கோட்டை, இராமேஸ்வரம் பகுதிகளை சேர்ந்த கடற்றொழிலாளர்களை எல்லை தாண்டிச் செல்லவேண்டாம் என தடுத்து நிறுத்துங்கள். அவர்களால் எங்கள் வாழ்வாதாரங்கள் அழிக்கப்படுகின்றன.

தொப்புள்கொடி உறவுகள் என கூறிக்கொள்ளும் இரு தரப்பினருக்கும் இடையில் எதிர்காலத்தில் தேவையற்ற பிரச்சினைகள், முரண்பாடுகள் வராமல் தடுத்து நிறுத்துங்கள்.

இரு நாட்டு அரசாங்கமும் மீனவர் பிரச்சினையை பேசி தீர்வினைப் பெற வேண்டும். தமிழக அரசும் இது தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

# தமிழக மீனவர்களின் அத்துமீறல் கண்டித்து தீவகத்தில் போராட்டம்!

இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான எல்லைதாண்டிய அத்துமீறல் மீன்பிடி நடவடிக்கைகளைக்கண்டித்துயாழ்ப்பாணம்தீவகப் பகுதி மீனவர்கள் 29.07.2026 அன்று கடலில் இறங்கி கறுப்புக்கொடி ஏந்திய போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஆதரவாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், பருத்தித்துறை நகரசபை தவிசாளர் டக்ளஸ் வின்சன் டீபோல் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

குறிகட்டுவான் இறங்குதுறை கடற்பகுதியில் படகுகளில் கடலுக்குள் இறங்கிச் சென்ற தீவக மீனவர்கள், கறுப்புக்கொடிகளை ஏந்தி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன், ஜனாதிபதிக்கு அவசர நடவடிக்கை கோரி கோரிக்கை மனுவையும் விடுத்தனர்.

இந்திய இழுவைப் படகுகளின் சட்டவிரோத அத்துமீறலால்தங்களதுவாழ்வாதாரம்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும் அழிக்கப்படுவதாக போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

குறித்த போராட்டக்காரர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கோரிக்கை மனுவில், நெடுந்தீவு, நயினாதீவு, வேலணை, எழுவைத்தீவு, அனலைதீவு, யாழ்குடா, பாக்குநீரிணை மற்றும் மன்னார் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த பாரம்பரிய மீனவ சமூகங்களாகிய தாங்கள், தங்களது வாழ்வாதாரம், கடல்வளம் மற்றும் நாட்டின் கடல்சார் மரபைப் பாதுகாப்பதற்காக அரசின் உடனடி தலையீட்டை கோரியுள்ளனர்.

மேலும் பல தசாப்தங்களாக இந்திய இழுவைப் படகுகள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து அடிமடி இழுவை மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகவும், இது வெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை மட்டுமன்றி கடலடித் தளங்கள், பவளப் பாறைகள் மற்றும் மீன்களின் இனப்பெருக்கப் பகுதிகளை அழித்து கடல் உயிரினப் பல்வகைமையையும் மீன்வளத்தையும் கடுமையாக பாதிப்பதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், இந்த நடவடிக்கைகள் வடக்கின் கடல்சார் பொருளாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் இலங்கையின் கடல்வள உரிமைகளுக்கு நேரடியான அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காரைக்கால், நாகப்பட்டினம் மற்றும் தொண்டி பகுதிகளைச் சேர்ந்த இந்திய இழுவை மடி விசைப்படகுகள், கடந்த ஜூலை 16 முதல் 18 ஆம் திகதி வரை மூன்று நாட்களில் தீவகத்தைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட பாரம்பரிய மீனவர்களின் ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான நண்டு வலைகளை இழுத்தழித்து சேதப்படுத்தியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அரசுகள் உறுதியான தீர்வை வழங்கத் தவறியுள்ளதால், வடக்கு மீனவர்களிடையே ஏமாற்றமும் நம்பிக்கையின்மையும்





அதிகரித்துள்ளதாகவும், இலங்கை–இந்திய இராஜதந்திர உறவுகளின் பெயரில் வடக்கு மக்களின் வாழ்வாதாரம் தொடர்ந்து பலியிடப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வடக்கின் பாரம்பரிய கடல்சார் வாழ்க்கை மரபு அழிந்துவிட்டால் அது வடக்கு மக்களுக்கு மட்டுமல்லாது முழு இலங்கைக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாக அமையும் என்றும், கரையோர மீனவ சமூகங்கள் நாட்டின் கடல் எல்லைகள், கடல்வளம் மற்றும் கடல்சார் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் முக்கியமான சமூகமாக இருந்தபோதிலும் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய பாதுகாப்பு தங்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கைக் கடற்பரப்பிற்குள் வெளிநாட்டு இழுவைப் படகுகள் மேற்கொள்ளும் சட்டவிரோத அடிமடி இழுவை மீன்பிடியைத் தடுக்கும் வகையில் உறுதியான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும், பாரம்பரிய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளை பாதுகாக்க வேண்டும், கடல் உயிரினப் பல்வகைமை, மீன்வளம் மற்றும் நீலப் பொருளாதாரத்தை எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்க வேண்டும், வடக்கு மக்களுக்கும் நாட்டின் ஏனைய மக்களைப் போன்று சமமான சட்டப் பாதுகாப்பும் அரசின் கவனமும் வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

# -வவுனியாவில் இரு வேறு சிறுவர் துஸ்பிரயோகங்கள் -

## 14 வயது மகள் துஸ்பிரயோகம் தந்தைக்கு 45 வருடம் சிறை!

கடந்த 2013 மற்றும் 2014 ஆண்டு காலப் பகுதிகளில் தனது சொந்த மகளை தொடர்ச்சியாக பல தடவைகள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கிய தந்தைக்கு 45 வருட கடூழிய சிறைத் தண்டனை மற்றும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 12 இலட்சம் ரூபாய் நஸ்ட ஈடு மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் நீதிமன்ற அபராத தொகையும் வழங்குமாறு வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா அவர்களினால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

14 வயது நிரம்பிய சிறுமிக்கு எதிராக குறித்த செயலானது வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் 2013, 2014 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில் குறித்த பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தையினை பொலிசார் கைது செய்து பி அறிக்கையின் மூலம் வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு வழக்கு தொடரப்பட்டது.

அதனை தொடர்ந்து குறித்த எதிரிக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் கடந்த 2022 ஆம் ஆண்டு வவுனியா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பகர்வு பத்திரம் தாக்கம் செய்யப்பட்ட நிலையில், வழக்கு தொடர்ச்சியாக விளக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டு, குறித்த வழக்கானது வவுனியா மேல் நீதிமன்றத்தில் தீர்ப்புக்காக வியாழக்கிழமை (16.07) திகதியிடப்பட்டு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதன்போது, குறித்த 47 வயது நிரம்பிய எதிரிக்கு எதிராக 4 பாலியல் வன்புணர்வு குற்றச் சாட்டுக்கள் அரச சட்டவாதியால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய மன்று, இரண்டு வெவ்வேறு வழக்குகளில் 4 குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்ட நிலையில் 45 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. அத்துடன், நிரூபிக்கப்பட்ட ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் ரூபாய் 3 இலட்சம் வீதம் 12 இலட்சம் ரூபாய் சிறுமிக்கு நஸ்ட ஈட்டுத் தொகையாக செலுத்த வேண்டும் எனவும், ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் 25 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சம் ரூபாய் நீதிமன்றத்திற்கு அபாரம் செலுத்த வேண்டும் எனவும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா தீர்ப்பளித்தார். குறித்த வழக்கினை சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பாக அரச சட்டவாதி ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீ நெறிப்படுத்தியிருந்தார்.

குறித்த பாதிக்கப்பட்ட சிறுமியை பாதுகாக்க வேண்டிய அவரின் இயற்கை பாதுகாவலராகிய தந்தையே குறித்த குற்றச்சாட்டினை புரிந்துள்ளமை காரணமாக குறித்த எதிரிக்கு எதிராக எவ்வித கருணையும் காட்டாது அதிகபட்ச தண்டனை விதித்துள்ளதாக நீதிபதி அவர்கள் தனது தீர்ப்பின் போது சுட்டிக்காட்டி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 14 வயது சிறுமி வன்கொடுமை பாதுகாவலருக்கு 20 வருட சிறை!

2017 செப்டம்பர் மாதம் வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் பெற்றோரால் கைவிடப்பட்ட 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய 54 வயது பாதுகாவலரை, வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா “குற்றவாளி” என அறிவித்து இன்று (24) தீர்ப்பளித்தார்.

பாதிக்கப்பட்ட சிறுமி கருவுற்றமையைத் தொடர்ந்து பொலிஸ் புலன் விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன் பிரகாரம், 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சந்தேக நபருக்கு எதிராக வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து, 2023இல் சந்தேக நபருக்கு எதிராக சட்ட மாஅதிபர் திணைக்களத்தினால் குற்றப்பகர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கானது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், சந்தேக நபர் தலைமறைவாகியிருந்தார். அதனையடுத்து, சந்தேக நபர் முன்னிலையாகாத இவ்வழக்கானது சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் அரச சட்டத்தரணி ஸ்ரீ சிவஸ்கந்தஸ்ரீயினால் நெறிப்படுத்தப்பட்டது.

இவ்வழக்கு விசாரணைகளின் பின்னர், தீர்ப்பினை வழங்கிய நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா, வழக்கு தொடுத்தவர் தரப்பானது சந்தேக நபருக்கு எதிரான குற்றச்சாட்டினை சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு நிரூபித்ததால் அந்த நபர் “குற்றவாளி” என அறிவித்தார்.

அத்தோடு, குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனையும், ஒரு இலட்சம் ரூபா நீதிமன்ற அபராதம் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு மில்லியன் ரூபா இழப்பீடும் செலுத்தப்பட வேண்டும் என தீர்ப்பளித்தார்.

இந்த குற்றச்செயலின்போது எதிரியால் சிறுமிக்கு இழைக்கப்பட்ட கடுமையான உடல் மற்றும் உளவியல் சித்திரவதைகள், சிறுமி கருவுற்றமை, குற்றவாளி வழக்கு விசாரணைகளிலிருந்து தலைமறைவானமை, சிறுமியின் பாதுகாவலரே குறித்த செயலை புரிந்தமை போன்றவை குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை விதிக்கப்பட பிரதான காரணிகளாக அமைந்துள்ளன என மேல்நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

## புகைப்பிடிப்பதால் தினமும் 50 உயிரிழப்புகள் 214 பில்லியன் பொருளாதார இழப்பு!

இலங்கையில் புகைப்பிடித்தல் பாவனை காரணமாக நாளாந்தம் சுமார் 50 மனித உயிரிழப்புகள் ஏற்படுவதுடன், நாட்டின் பொருளாதாரமும் கடுமையாக பாதிக்கப்பட்டு வருவதாக பேராசிரியர் எல்.எல். அமில இசுரு தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் தரவுகளின்படி, புகைப்பிடித்தல் காரணமாக இலங்கையில் நாளாந்தம் சுமார் 50 பேர் மரணமடைவதுடன், ஒரு ஆண்டுக்கு 20,000 இளம் உயிர்கள் இதனால் பறிபோகின்றன.

புகைப்பவர்களின் நேரடி மற்றும் மறைமுக சுகாதாரப் பிரச்சினைகளுக்காக அரசாங்கம் வருடாந்தம் சுமார் 214 பில்லியன் ரூபாயைச் செலவிட வேண்டியுள்ளது.

உலகளவில் அதிகளவான புகைப்பிடித்தல் காரணமாக மாத்திரம் 1.6 மில்லியன் மக்கள் உயிரிழக்கிறார்கள். புகையிலை மூலம் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வரி வருமானத்தை விட, அதனால் புகைப்பிடிப்பவர்களுக்கு ஏற்படும் பக்கவாதம், மாரடைப்பு உள்ளிட்ட இதய நோய்கள், பல்வேறு வகையான புற்றுநோய்கள் மற்றும் கல்லீரல் சிதைவு போன்ற கொடிய நோய்களுக்கான சிகிச்சைக்காக அரசாங்கம் மூன்று மடங்கு அதிக நிதியை மக்களின் வரிப்பணத்தில் இருந்து வருடாந்தம் சுமார் 214 பில்லியன் ரூபாயை நேரடியாகவும் மறைமுகமாகவும் செலவிடுகிறது. இவ்வாறு செலவிடுவதால் இது நாட்டின் பொருளாதாரத்திற்கு ஒரு பெரும் சுமையாக மாறியுள்ளது. மேலும், சிகரெட் புகைப்பவர்கள் தங்களைச் சுற்றியுள்ள புகைக்காத பொதுமக்களுக்கும், குறிப்பாகத் தங்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் பெரும் தீங்கை விளைவிப்பதுடன், உலகளவில் இவ்வாறு மற்றவர்கள் வெளியிடும் புகையைச் சுவாசிப்பதன் காரணமாக மாத்திரம் வருடாந்தம் 1.6 மில்லியன் மக்கள் உயிரிழப்பதாக உலகளாவிய சுகாதாரத் தரவுகள் எச்சரிக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில், இலங்கையில் புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகார சபை மற்றும் இலங்கை மருத்துவ சங்கம் ஆகியன இணைந்து, 2010 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்த தலைமுறையினருக்கு புகைப்பிடித்தல் தயாரிப்புகளை விற்பனை செய்வதை முற்றாகத் தடை செய்வதற்கான சட்டப் பூர்வ நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் நடைமுறைக்கு வரும் பட்சத்தில், உலகிற்கே இலங்கை ஒரு முன்மாதிரியான நாடாகத் திகழும் என்றார்.

## திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை!

### உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பு

திருகோணமலை எண்ணெய் தாங்கி அமைந்துள்ள வளாகத்தை வர்த்தக ரீதியாக அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, அங்குள்ள 29 எண்ணெய் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்காக சர்வதேச போட்டி கேள்வி கோருவதற்கு டிரின்கோ பெற்றோலியம் டெர்மினல் லிமிடெட் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் அமைந்துள்ள வளாகத்தில் உள்ள 61 எண்ணெய்த் தாங்கிகளில் 29 தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கான முதலீட்டு வாய்ப்புகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக ஆங்கில இணைய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கூட்டு நிறுவனமான டிரின்கோ பெற்றோலியம் டெர்மினல் லிமிடெட் நிறுவனத்தில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 51 சதவீத பங்குகளையும், இந்தியாவின் லங்கா ஐ. ஓ.சி. 49 சதவீத பங்குகளையும் கொண்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், மொத்தம் 99 எண்ணெய் தாங்கிகளில் 61 தாங்கிகள் கூட்டு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, இந்தியா, இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளுக்கு இடையில் இருவழி எரிசக்தி விநியோகத்துக்கான பல்நோக்கு குழாய் இணைப்பு திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான முத்தரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தொடர்ந்து, எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக திருகோணமலை பெற்றோலிய மையத் திட்டத்தை விரைவாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கையும் இந்தியாவும் அடையாளம் கண்டுள்ளன.

இந்நிலையில், முதலீட்டாளர்களிடமிருந்து முன்மொழிவுகளை கோரும் அறிவிப்பு ஒரு மாத காலத்திற்குள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்த முடியும் என இலங்கை அரசாங்கம் கருதுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்

## - சமூக நீதிக்கான மக்கள் பேரவை வலியுறுத்து -

போரின் போது இராணுவத்தினரால் பறிக்கப்பட்ட மக்களின் காணி நிலங்களை உடனடியாக மீண்டும் ஒப்படைக்குமாறு வலியுறுத்தி, சம உரிமை இயக்கம் மற்றும் சமூக நீதிக்கான மக்கள் பேரவை ஆகியன கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் கேப்பாபிலவு, பலாலி, காஞ்சி ஆகிய பகுதி மக்களுடன் யாழ்ப்பாணம் நகரில் உள்ள செந்தே செல்வா மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (17) விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தன.

இந்த கலந்துரையாடலின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிக்கும் போதே சம உரிமை இயக்கத்தின் அமைப்பாளரும், முன்னிலை சோசலிசக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான இந்திரானந்த டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாம் சம உரிமை இயக்கம் என்ற ரீதியில் கேப்பாபிலவு, பலாலி, காஞ்சி ஆகிய கிராமப் பகுதி மக்களின் காணி நிலங்கள் வலுக்கட்டாயமாகப் பறிக்கப்பட்டு தற்போது 36 வருடங்கள் கடந்துள்ளன என்பதை நாம் அறிவோம்.

போர் முடிவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்கு அந்த நிலங்களில் மீளக் குடியேறக் காத்திருக்கும் மக்களுக்கு அவற்றை மீண்டும் வழங்குவதற்கு இன்னும் முடியாமல் போயுள்ளது. இது மிகவும் துரதிர்ஷ்டவசமான ஒரு சூழ்நிலையாகும்.

ஏனெனில் இன்றைய நாளிலும் அந்த மக்கள் தங்களின் காணி நிலங்களைக் கோரி போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். பல்வேறு அரசியல்வாதிகள் இங்கு வந்து இந்த மக்களுக்கு அவர்களின் நிலங்களை மீட்டுத் தருவதாகப் வாக்குறுதிகளை வழங்கிச் சென்றனர். ஆனால் அந்த வாக்குறுதிகள் அனைத்தும் தேர்தல் வரை மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த அரசாங்கம் அவ்வாறானது அல்ல என நினைத்துத்தான் யாழ்ப்பாணத்து தமிழ் மக்கள் இம்முறை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு தங்களின் வாக்குகளைப் பயன்படுத்தினர். ஆனால் தற்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் நெருங்கிவிட்டன. எனினும், வடக்கில் வலுக்கட்டாயமாகப் பிடிபட்டுள்ள காணி நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு இன்னும் எந்தவித ஆயத்தங்களும் இல்லை.

யாழ்ப்பாணத்து மக்கள் இன்னமும் ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய நாளிலும் சில தேவாலயங்களும் கோயில்களும் இராணுவ முகாம்களுக்கு உள்ளேயே காணப்படுகின்றன. அவற்றிற்குத் தங்களின் மத வழிபாடுகளை மேற்கொள்ளச் செல்வதானால் அடையாள அட்டையை கட்டாயமாகக் காண்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சில இராணுவ முகாம்களுக்குள் ஏக்கர் கணக்கில் தென்னந்தோட்டங்கள் பராமரிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்து ஏழை விவசாயி கடைகளுக்குத் தேங்காயொன்றை 100 ரூபாவுக்கு விற்பனை செய்யும்போது, இராணுவத்தினர் தேங்காய்களை 50 ரூபாவுக்கு விற்பனை செய்கிறார்கள். விவசாயியின் மகன் என்று கூறிக்கொண்ட அநுர திசாநாயக்கவிடம் நாம் கேட்கின்றோம், அப்படியென்றால் இந்த மக்கள் எவ்வாறு வாழ்வது?

தெற்கில் இவ்வாறு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் கைப்பற்றி இராணுவ முகாம்கள் அமைக்கப்படவில்லை என்பதை நாம் அறிவோம். பொதுவாக இராணுவ முகாம்கள் மனித குடியிருப்புகளுக்கு மத்தியில் அமைக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம், அதனால் மக்களுக்கு, குறிப்பாகச் சிறுவர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்பதனாலாகும். ஆனால் தசாப்த காலமாக யாழ்ப்பாணத்து மக்கள் இராணுவ முகாம்களுக்குள்ளேயே வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வளவு காலமும் தெற்கில் உள்ள சிங்கள சமூகத்துகு இந்தப் பிரச்சினை புரியவில்லை. தங்களின் நிலங்களைக் கோரி நீண்ட வருடங்களாகத் தமிழ் மக்கள் முன்னெடுத்து வரும் இந்த நியாயமான போராட்டத்துக்கு இப்பொழுதாவது தெற்கு சமூகம் தனது ஆதரவை வழங்க வேண்டும். எனவே சம உரிமை இயக்கம் என்ற ரீதியில் இந்தச் போராட்டங்களுக்கு எங்களது முழுமையான ஆதரவை வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளை மீண்டும் வென்றெடுக்கும் போராட்டத்தை மையப்படுத்தி ஒன்றிணையுமாறு இந்த நாட்டில் போராடும் அனைத்துச் சக்திகளுக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம். அதேபோன்று வட பகுதி மக்களிடமிருந்தும் பறிக்கப்பட்ட காணி நிலங்களை உடனடியாக அந்த மக்களுக்கே வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாம் அரசாங்கத்திடமும் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## பிரித்தானிய அமைச்சரவையில்

# ஈழத்தமிழருக்கு உயரிய பொறுப்பு அமைச்சரானார் உமா குமரன்!

ஈழத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன், பிரித்தானியாவின் புதிய பிரதமர் ஆண்டி பர்ன்ஹாம் தலைமையிலான அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவின் வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சில் (Foreign, Commonwealth and Development Office) வெளிவிவகார அமைச்சர் எட் மிலிபாண்ட் தலைமையின் கீழ் இராஜாங்க அமைச்சராக அவர் பதவியேற்றுள்ளார். இதன் மூலம் பிரித்தானிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை வகிக்கும் முதல் தமிழ் பெண் என்ற வரலாற்றுச் சாதனையை அவர் படைத்துள்ளார்.

இலங்கையில் உள்நாட்டுப் போரின் காரணமாக பிரித்தானியாவில் குடியேறிய தமிழ் பெற்றோருக்கு பிறந்த உமா குமரன், அண்மைய பொதுத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். தற்போது அமைச்சுப் பொறுப்பை ஏற்றதைத் தொடர்ந்து, தனது சமூக ஊடகப் பதிவில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ள அவர், “எனது பெற்றோருக்கு பாதுகாப்பான



புகலிடமாக இருந்த பிரித்தானியா, அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பும் வாய்ப்பை வழங்கியது. இன்று அந்த நாட்டிற்கு அமைச்சராக சேவையாற்றுவது பெருமைக்குரியது” என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய அரசாங்கத்தின் அமைச்சரவை அமைப்பில் இராஜாங்க அமைச்சர் பதவி, நாடாளுமன்ற துணைச் செயலாளர் பதவியை விட உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. அமைச்சரவை அமைச்சருக்கு அடுத்த முக்கிய நிர்வாகப் பொறுப்புகளில் ஒன்றாக இந்தப் பதவி விளங்குகிறது.

## அனோஜனை விடுவிக்க நடவடிக்கை

# கோடீஸ்வரன் எம்.பி கோரிக்கை

சவூதி அரேபியாவில் நபிகள் நாயகத்தை அவமதித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள சிவராசா அனோஜனை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொதுமனுக்கள் பற்றிய குழுவின் நடவடிக்கைமுறை மற்றும் செயலாற்றுகை பற்றிய சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிவராசா அனோஜன் என்பவர் சவூதி அரேபியாவில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கைது செய்யப்பட்டமைக்கு என்ன காரணம் என்றால் யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்லும் போது சுப்ரமணியம் என்ற நாயை நபரொருவர் தாக்கினார். இந்த சம்பவம் இரண்டு சமூகங்களுக்கு இடையில் முகநூல் வாயிலாக பிரச்சினைகளை ஏற்படுத்தியது.

முகநூலில் ஒரு மதத்தை இன்னுமொரு மதத்தவர் விமர்சித்தும் பதிவிட்டிருந்தனர். இந்த பதிவு காரணமாக முரண்பாடான சூழல் காணப்பட்டது. இந்நிலையில் சவூதியில் பணிபுரிந்த தமிழ் இளைஞனான சிவராஜா அனோஜன் உணர்ச்சி வசப்பட்டு, முஸ்லிம்களாலும் ஏனைய மதத்தவர்களாலும் மதிக்கப்படும் நபிகள் நாயகத்தை விமர்சித்து பதிவிட்டிருந்தார்.

ஆனால் குறிப்பிட்ட 5 நிமிடங்களுக்குள் அந்தப் பதிவை நீக்கி, தனது தவறு தொடர்பில் மன்னிப்பும் கேட்டிருந்தார். ஆனால் அவர் பிழையை உணர்ந்து முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கேட்டிருந்த போதும், இங்கிருந்த சிலர் சவூதி அரசாங்கத்திற்கு விடுத்த கோரிக்கைக்கமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் வேண்டுமென்று அந்த தவறை செய்யவில்லை. உணர்ச்சி வசப்பட்டு அந்த தவறை செய்துள்ளார். அவருக்கான மன்னிப்பை வழங்கி அவரை விடுதலை செய்ய வேண்டும். இந்த சபையின் ஊடாக இந்த அரசாங்கத்தின் ஊடாக சவூதி அரசாங்கத்திற்கு விடயத்தை கொண்டு சென்று அவரை விடுதலை செய்வதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்றார்.

# இலங்கையில் நடந்தது இனப்படுகொலை சர்வதேச விசாரணை வேண்டும்

## - ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவிடம் கோரிக்கை -

இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை தான் என்பதனை ஏற்றுக்கொண்டு , சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவிடம் தாம் கோரிக்கையை முன் வைத்துள்ளதாக, வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூது குழுவினர் 22.07.2026 அன்று புதன்கிழமை செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு பணிகளை நேரில் பார்வையிட்டனர்.

இதன்போது, தூதுக்குழுவின் கவனத்தை ஈர்க்கும் முகமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகளாக வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி உள்ளிட்ட இருவரை அழைத்து ஐரோப்பிய ஒன்றியத்தினர் அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர்.

குறித்த சந்திப்பின் பின்னர், வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி ஊடங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

ஐரோப்பிய ஒன்றிய விசேட தூதுக்குழுவினரை செம்மணி புதைகுழி வாசலில் சந்தித்திருக்கிறோம். அவர்களிடம் எங்களுடைய உயிருக்கு மேலான கோரிக்கையான மகஜரையும் கையளித்திருக்கின்றோம்.

தாங்கள் தங்களால் இயன்ற வரைக்கும் எங்களுக்காக வேலை செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

எங்களுக்கு எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது, என தெரிய வேண்டும். இலங்கையில் இனப்படுகொலை தான் நடந்தது என்பதனை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதனூடாக சர்வதேச நீதி விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். உள்ளகப் பொறிமுறைகளையோ, உள்ளக விசாரணைகளையோ அல்லது OMP அலுவலகம் மாதிரி இலங்கை அரசால் அமைக்கப்படுகின்ற அலுவலகங்களையோ நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். எங்களுக்கு இலங்கை அரசாங்கம் ஒருபோதும் எங்களுக்கான நீதியை தரப்போவது இல்லை.

நாங்கள் எத்தனையோ ஆணைக்குழுக்களை சந்தித்திருக்கிறோம், ஆட்சி செய்கின்ற அரசாங்க பிரதிநிதிகளை சந்தித்திருக்கின்றோம்.

அது எதுவும் எமக்கு எதனையும் பெற்று தரவில்லை என்ற பிற்பாடு தான் நாங்கள் சர்வதேசத்தின் ஊடான ஒரு விசாரணையை கோரி நிற்கின்றோம்.

நாம் சர்வதேச விசாரணையை கோரி நிற்கிறோம் என்றால், சர்வதேசம் எங்களுக்கு ஒரு சரியான நீதியை பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையில் தான் சர்வதேச தரப்புக்களிடம் கோரிக்கையையும் மனுக்களையும் கையளித்துக் கொண்டிருக்கிறோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களில் இதுவரையில் 450 பேருக்கு மேல் எங்களோடு இருந்தவர்கள் மரணித்து விட்டார்கள். அவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும். எங்களுடைய உறவுகளுக்கான நீதி கிடைக்க வேண்டும்.

கொடூர யுத்தமும் இன அழிப்பும் நடந்த பிற்பாடு கையளித்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை சர்வதேசம் தான் தகவல்களை பெற்று வெளிப்படுத்த வேண்டும். கொலையாளிகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும்.

எத்தனையோ விசேட தூது குழுக்கள், பிரதிநிதிகள் இங்கே வந்து போயிருக்கின்றார்கள். ஆனால் இதுவரைக்கும் எங்களுக்கு எந்தவிதமான ஒரு நல்லதொரு வார்த்தைகளை அவர்கள் எங்களுக்கு தெரிவிக்கவில்லை.

ஆகவே, நீங்கள் ஐரோப்பிய ஒன்றிய விசேட தூதுக்குழுவாக இங்கே வந்திருக்கிறீர்கள். ஐநா மன்றத்தில், மனித நேயங்களை நேசிக்கின்ற நாடுகளில் எங்களுடைய பிரச்சினைகளை முன்வைத்து, எங்களுக்கான சர்வதேச நீதிக்கான விசாரணையை நீங்கள் மேற்கொள்ள உதவ வேண்டும் என்று கூறி, அறிக்கை எமது அறிக்கையை கையளித்தோம்.

எமது இந்த அறிக்கை, அறிக்கை மட்டுமல்ல எங்களுடைய உயிரை உங்களுடைய கையிலே ஒப்படைத்திருக்கின்றோம் என்று கூறி அதனை கையளித்தோம் என்றார்.




## நீங்கள் தந்தது வெறும் காகிதம் அல்ல இதை எனது உள்ளத்தால் ஏற்கிறேன்

### - தெரிவித்த ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் -

நீங்கள் தந்தது வெறும் காகிதம் அல்ல என்பது எமக்கு தெரியும் இதனை எனது உள்ளத்தால் ஏற்கின்றேன் நான் உறுதி மொழிதரமுடியாது ஆனால் என்னால் உங்களின்துன்ப துயரங்களை அறிவோம் உங்கள் பிரச்சினைகளை என்னால் முடிந்தவரையும் ஐ.நா சபையிலும், மனித உரிமைகளை பேணம் நாடுகளிடமும் உங்கள் பிரச்சினையை எடுத்து கூறுவோம் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தூ துவர் கார்மென் தலையையிலான குழுவினர் எடுத்ரைத்துள்ளனர்.



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுடிருக்கும் ஐரோப்பியொன்றிய துதுகுழுவினர் செம்மணி மனித புதைகுழி அகழ்ஆய்வு இடத்திற்கு நேரில் விஜயம் செய்து அங்கு இடம்பெற்றுவரும் அகழ்வு பணிகளை பார்வையிட்டதுடன் களத்தில் கடமையாற்றிவரும் யாழ் நிதிமன்ற நிதிபதி,யாழ் போதனாவைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரி மற்றும் சட்டதரணிகளிடம் கலந்துலையாடினார்கள்.

இதன்போது ஐரோப்பிய துதுக்குழுவினரின் வருகைகையின் போது தமக்கு சர்வதேச நிதிவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் முன்னேடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட இருவரை உள்ளே அழைத்து கலந்துரையாடியபோதே ஐரோப்பிய துதுக்குழுவினர் இந்த விடயத்தினை தெரிவித்தார்கள் என வடக்கு பிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கதலைவி இதனை தெரிவித்தார். இதே வேளை குறித்த ஆர்பாட்டத்தில் பொலிசார் உறவுகளை வீடியோ எடுத்ததுடன் நக்கல்,நையாண்டிகள்களுடன் மக்களை ஒடுக்கியும் அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டிருந்தார்கள்.



# கடந்த கால வடுக்கள் தீர்க்கப்படவில்லை

## – ஐரோப்பிய ஒன்றியம் கவலை –



இலங்கையில் கடந்த காலத்தின் காயங்கள் இன்னும் ஆறவில்லை என்பதை செம்மணி மனிதப் புதைகுழி தெளிவாக நினைவூட்டுவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உண்மையையும் நீதியையும் தேடித் தொடர்ந்து போராடி வருவதாகக் குறிப்பிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், களத்தில் பணியாற்றும் குழுக்களின் முயற்சிகள் உறுதியான பலன்களைத் தர வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

செம்மணி மனித புதைகுழிக்குச் சென்ற ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பப் பிரதிநிதிகளிடமிருந்து மனுவைப் பெற்றுக்கொண்டதுடன், உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலைத் தேடும் முயற்சியில் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தியோகப்பூர்வ எக்ஸ் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் கடந்த கால வடுக்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை என்பதற்கான மிகக் கடுமையான நினைவூட்டலாகவே யாழ்ப்பாணம் செம்மணி மனித புதைகுழி விளங்குகிறது. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்ந்தும் உண்மையைத் தேடியும் நீதிக்காகப் போராடியும் வருகின்றனர். களத்தில் பணியாற்றும் குழுக்களின் முயற்சிகள் உறுதியான பலன்களைத் தர வேண்டும். அப்போதுதான் குடும்பங்கள் உண்மையை அறிந்து நீதியைப் பெற முடியும்.

செம்மணி மனித புதைகுழி தளத்திற்கு விஜயம் செய்தபோது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து மனுக்களைப் பெற்றுக்கொண்டோம். உண்மை,நீதிமற்றும்பொறுப்புக்கூறலுக்கான அவர்களின் தேடலுக்குத் தொடர்ச்சியான ஆதரவையும் மீண்டும் உறுதிப்படுத்துவதாக தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் செம்மணிப் பகுதி, பல தசாப்தங்களாக காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் உடல்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற குற்றச்சாட்டுகளுடன் பிணைக்கப்பட்ட ஒரு துயர வரலாற்றைக் கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்களின் அடையாளமாக விளங்கும் இப்பகுதியில், அண்மைய காலங்களில் நீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பு மற்றும் தடயவியல் நிபுணர்களின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாராய்ச்சிகளில் நூற்றுக்கணக்கான மனித எழும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. குழந்தைகள் மற்றும் பொதுமக்களின் எழும்புக்கூடுகள், ஆடைகள், குழந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் போன்ற சான்றுகளும் இப்புதைகுழிகளில் இருந்து வெளிக்கொணரப்பட்டு வருவது ஒட்டுமொத்த நாட்டையும் உலுக்கியுள்ளது.

செம்மணி புதைகுழி தளத்திற்கு வருகை தந்த ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினரிடம், வட – கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் சார்பில் கோரிக்கை மனு ஒன்று கையளிக்கப்பட்டது.

தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை அறியும் உரிமை பல தசாப்தங்களாக மறுக்கப்பட்டு வருவதாகவும், உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகள் மீது தங்களுக்கு எந்தவித நம்பிக்கையும் இல்லை எனவும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கண்ணீருடன் தெரிவித்தனர். இந்த விவகாரத்தில் சர்வதேசத்தின் நேரடித் தலையீடு அவசியமென்றும், உண்மையான நீதியும் பொறுப்புக்கூறலும் சர்வதேச விசாரணை மூலமே சாத்தியமாகும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை நேரில் கேட்டறிந்த ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள், இலங்கையில் மனித உரிமைகள் நிலைநாட்டப்படுவதற்கும், உண்மை மற்றும் நீதிக்கான தொடர்ச்சியான முன்னெடுப்புகளுக்கும் தங்களது முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கறுப்பு யூலையின் 43வது ஆண்டு யாழில் நினைவேந்தல் நிகழ்வு!



கறுப்பு யூலை இனப்படுகொலையின் 43ம் ஆண்டு நினைவேந்தல் யாழில் தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

1983ம் ஆண்டு யூலை மாதம் 23ம் திகதி தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் ஸ்ரீலங்கா அரசின் துணையுடன் ஆயுதப்படைகளாலும் சிங்கள காடையர்களினாலும் கட்டவிழ்த்து விடப்பட்டன. தமிழர்கள் கொடூரமாக சுட்டும் வெட்டியும் உயிருடன் எரித்தும் கொல்லப்பட்டனர். பெண்கள் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டனர். தமிழர்களின் வர்த்தகங்கள் சூறையாடப்பட்டு தீயிட்டு எரிக்கப்பட்டன. தமிழர்களின் வீடுகள் அழிகப்பட்டன. கொழும்பு மற்றும் மலையகத்திலிருந்த தமிழ் மக்கள் சிங்கள காடையர்களினால் அங்கிருந்து விரட்டியடிக்கப்படனர்.
தமிழரிற்கு எதிரான இந்த வன்முறைச் சம்பவங்களினால் 5000ற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட தமிழர்களின் 43வது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் 24.07.2026 அன்று தமிழ்த் தேசியப் பேரவையால் நடாத்தப்பட்டிருந்தது. இந் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் மற்றும் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கொல்லப்பட்டவர்களின் நினைவாக சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டு மலரஞ்சலியும் நடைபெற்றது.



